# இயேசு ஊழியங்கள்



105/229, எம்.டி.எச் ரோடு, வில்லிவாக்கம், சென்னை – 600 049
போன் : 9003009752
ஈமெயில்: beten.vatsar@angeltv.org இணையதளம்: www.jesusministries.org

பிரியமுள்ள அன்பு மகளே,

அதிசீக்கிரமாக வரப்போகும் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் நல்வாழ்த்துக்கள்.

கர்த்தருடைய பெரிதான கிருபையினாலே இந்த புதிய மாதத்தில் இந்த கடிதத்தின் மூலமாக உங்களை சந்திப்பதில் எனக்கு மிகுந்த சந்தோஷம். கடைசிக்கால தீர்க்கதரிசன சந்ததியை வயிற்றில் சுமந்துகொண்டிருக்கும் நீங்கள் மிகவும் பாக்கியம் பெற்றவர்கள். காரணம் இந்த கடைசி நாட்களில் வரப்போகின்ற எல்லா உபத்திரவங்களிலிருந்து உங்கள் பிள்ளைகள் ஜெயமெடுக்கப்போகின்றார்கள். சங்கீதம் 8:2 ன் படி உங்கள் பாலகர்கள் வாயில் தேவனுடைய பட்டயம் இருக்கிறது. இந்த பட்டயம்தான் கடைசிக்காலத்தில் சாத்தானை எதிர்த்து யுத்தம் செய்யப்போகும் மிகப்பெரிய ஆயுதமாக செயல்படபோகிறது. எனவே உங்கள் கர்ப்பகாலங்கலில் தேவனை நன்றாக துதியுங்கள். அந்த துதியின் சத்தத்தைக் கேட்கும் உங்கள் சிசு கருவிலே பெலப்படும். அப்படிப்பட்ட சந்ததியை பெற்றெடுக்கப்போகிற நீங்கள் பாக்கியவதிகள். அதினால் உங்கள் பிள்ளைகளைப் பற்றி கவலைப்படாதிருங்கள். வேதம் சொல்லுகிறது, ஏசாயா 54:13ல் “உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள் உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்.” கர்த்தருடைய தீர்க்கதரிசிகளுக்கு கர்த்தரே போதித்து நடத்துகிறார். அவர்கள் கர்த்தருடையவர்கள் என்னதான் இந்த பூமிக்குரிய தாய் தகப்பனாக நீங்கள் இருந்தாலும், அவர்கள் கர்த்தருடைய வித்துக்கள். அவர்தான் அவர்களுடைய உண்மையான தகப்பன். இதை மனதிலே வைத்து உங்கள் கருவிலே வளர்ந்துகொண்டிருக்கும் குழந்தைக்காக நன்றாக ஜெபியுங்கள். தேவனை துதியுங்கள்.

இப்போது இந்த ஜெபத்தை என்னோடு சேர்ந்து ஜெபியுங்கள். கர்த்தர் நிச்சயம் உங்களை ஆசீர்வதிப்பார்.

மகா பரிசுத்தமுள்ள எங்கள் அன்பின் பரலோக பிதாவே, இந்த புதிய மாதத்தின் துவக்கத்தில் என் அன்பு மகளையும் அவர்கள் கர்ப்பத்தில் நீர் கொடுத்த தீர்க்கதரிசன குழந்தையையும் உம் கரத்தில் ஒப்புக்கொடுக்கிறேன். இதுவரை இவர்களை பத்திரமாக பாதுகாத்த தேவாதி தேவனுக்கு கோடி நன்றிகள். இனியும் இவர்களை சுகத்துடனும் பெலத்துடனும் பாதுகாப்பீராக. இவர்களுக்கு சுகப்பிரசவத்தைக் கட்டளையிடும். உன் பிள்ளைகள் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள் என்று வேதத்தில் வாசிக்கிறபடி நீர் இவர்களின் குழந்தைகளை நல்வழியிலே நடத்தும். உம்முடைய பலத்த கரம் இவர்களை மூடி பாதுகாத்துக்கொள்ளட்டும். சந்தோஷத்தாலும் சமாதானத்தினாலும் இருவரையும் ஆசீர்வதியும், இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் எங்கள் பரிசுத்தமுள்ள நல்ல பிதாவே ஆமென்.

என் அன்பு மகளே, கர்த்தர் நிச்சயமாக உங்களையும் உங்கள் கர்ப்பத்தின் கனியையும் ஆசீர்வதிப்பார். தேவ கிருபை உங்களைத் தாங்குவதாக.

மேலும் ஜெப உதவிக்கு எங்கள் ஜெபவீரர்களை தொடர்புக்கொள்ளுங்கள் : 9003009752

அன்புடன்



சாது சுந்தர் செல்வராஜ்

*குறிப்பு : உங்கள் ஏஞ்சல் டிவி-யில் பெட்டன் யாட்சார் நிகழ்ச்சி ஒவ்வொரு புதன் கிழமை மதியம் 3 மணிக்கும், அதன் மறுஒளிபரப்பு ஞாயிற்றுக் கிழமை மாலை 5:30 மணிக்கும் ஒளிபரப்பாகும். காணத்தவறாதீர்கள்.*